பக்கம்: எட்டு
விலை ரூபா 5-00

Registered as a Newspaper in Sri Lanka.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


# வலம்புரி
# VALAMPURI


அழகிய தங்க நகைகளை
உங்கள் எண்ணம்போல்
தெரிவுசெய்திட
**அர்ச்சனா ஜுவலர்ஸ்**
176/1, நாவலர் வீதி,
118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-1518)



சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 மாசி 19 ஞாயிற்றுக்கிழமை (25-02-2001) தொலைபேசி: 3378 ஒலி: 67


★ இனப்பிரச்சினைக்கான தீர்விற்து

# அரசு-புலிகள்சமாதான பேச்சுகான தருணத்தை அரசு விடக்கூடாது!

## ஐரோப்பிய தூதுக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது ஏற்பட்டு வரும் சுமுகமான சூழ்நிலையை அரசாங்கம் நல்லமுறையில் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான முயற்சியில் ஈடுபட முன்வரவேண்டும். அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் எப்போது பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டுமென்பதை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் தான் தீர்மானிக்க வேண்டும். நோர்வேயின் நல்ல முயற்சிகளுக்கு ஐரோப்பிய யூனியன் என்றும் ஆதரவு அளிக்கும்.**

ஐரோப்பிய யூனியன் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு தலைமை தாங்கி கொழும்பு வந்திருந்த ஜே. கொறின்ஸ் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டின் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய யூனியன் பாராளுமன்றக் குழுவினர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஐவரும் கலந்து கொண்ட

→8-ம் பக்கம் பார்க்க

## பயங்கரவாத தடைசட்டம் கனடாவிலும் அமுல்?

[கொழும்பு]

கனடாவிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமென கனடா நாட்டு சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

கடந்த 22ம் திகதி கனடா பாரளுமன்றத்தில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் உரையாற்றியதையடுத்து. எதிர்க்கட்சியான ''கனடியன் அலையன்ஸ்'' உறுப்பினர்கள் ஆளும்கட்சி உறுப்பினர்களிடம் சரமாரியாகக்கேள்வி தொடுத்தனர்.

அதில் கனடாவிலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்கு வருமா என எழுந்த கேள்வியை அடுத்தே கனடா சட்டமாஅதிபர் பயங்கரவாத தடைச்சட்டம் கனடாவிலும் அறிமுகப்படுத்தப்படுமென அறிவித்துள்ளார். (ந)

## இலங்கையில் இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதமே நிலவுகிறது

### பௌத்தபீடாதிபதிகள் ஐரோ. குழுவிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தற்பொழுது இடம்பெற்றுவரும் பிரச்சினை இனப்பிரச்சினை அல்ல அது ஒரு பயங்கரவாதப்பிரச்சினை இப்பிரச்சினையில் வெளி நாடுகள் தலையிடக்கூடாது, இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதிகள் ஐரோப்பிய பாராளுமன்ற பிரதிநிதிகளிடம்தெரிவித்துள்ளனர்.

தமிழீழவிடுதலைப் புலிகள் ஆயிரக் கணக்கனா சிங்கள மக்களையும் பிக்குமார்களையும் கொலைசெய்துள்ளனர் புத்த விகாரைகளைக்கூடத் தாக்கி அழித்துள்ளனர் இதனால் இவர்களுடன் பேசி எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது என்றும் ஐரோப்பியத் தூதுக்குழுவினரிடம் அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் தெரிவித்துள்ளனர். (வ)

## புலிகளுடன் பேசுமாறு கோரி மாந்தையில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி!

(மாந்தை)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேசுவதற்கு உலக நாடுகள் அழுத்தம் கொடுக்கவேண்டும்என்று கோரி மாந்தை மேற்குப்பகுதி கோரிபல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது.

இராணுவக் கட்டுப்பாடற்ற மன்னார் மாந்தைப் பகுதியில் இடம்பெற்ற இப் பேரணியை மாந்தை மேற்கு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்க இராணுவக்குழு கொழும்பு வருகை

(கொழும்பு)

அமெரிச்க இராணுவ அதிகாரிகள் அடங்கிய ஐப்பது பேர்கொண்ட குழுவினர் இலங்கை இராணுவத்தினருக்குப் பயிற்சி அளிப்பதற்காக கொழும்புக்கு வருகை தந்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து வந்துள்ள இவ் ஐம்பதுஇராணுவ அதிகாரிகளும, திடீர்த்தாக்குதல்களை எவ்வாறு தடுப்பது, பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தல் போன்ற பலவிடயங்களில் இலங்கை இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கவுள்ளனர். (ந-4)

## அமெ தூதுவர் யாழ். வருவார்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் எதிர் வரும் ஆறாம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாணத்திற்குவிஜயம் மேற்கொள்ளும் அவர் யாழ்

→8ஆம் பக்கம் பார்க்க

## கோப்பாய் சந்தியிலிருந்து கைதடிவரை பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ச் சந்தியிலிருந்து கைதடி வடக்கு வரை பஸ் சேவை இடம்பெறுவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதடியில மீளக் குடியமர்தல் தொடர்பாக ரான் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேறகண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டது.

பெரும்பாலும் செவ்வாய்க்கிழமை இச்சேவை இடம்பெறலாம் என்றும் நாளை திங்கட்கிழமை இடம்பெறும் கூட்டத்தின் பின்னரே பஸ் சேவை குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## அமைச்சர் அத்வானி இலங்கை வருவார்!

(கொழும்பு)

இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி அடுத்த மாதம்2 ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.

4 ஆம் திகதி நடைபெறவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொன் விழாக் கொண்டாட்டங்களில்கலந்து

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யாழ். சுகாதார ஊழியர்கள் நேற்று கறுப்புப்பட்டி அணிந்து போராட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதாரப்பகுதி ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று கறுப்புப்பட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குடும்பநல சேவையாளர்கள். பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், மகப்பேற்று நிலைய ஊழியர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளிகளென நூற்றுக்கணக்கானோர் கறுப்புப்பட்டி அணிந்தவாறு தமது கடமையில் ஈடுபட்டிருந்ததாக எமது பிரதேச செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

நேற்றுக்காலையில் நாவலர் வீதி மகப்பேற்று நிலையத்தில் கூடிய சுகாதார ஊழியர்கள் கறுப்புப்பட்டியணிந்தவாறு தமது எதிர்ப்பைத்தெரிவித்தனர்.

சுகாதார வைத்திய அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பில் இயங்கவேண்டிய சுகாதாரப் பிரிவை கூறுபோட்டு உடைத்து சின்னாபின்னமாக்கிய நிலைமைமாறி மீண்டும் சுகாதாரப்பிரிவு ஓரணியில்செயலாற்றுவதற்கு ஏற்றவகையில் நிர்வாகச் சிக்கல்கள் காணப்படுவதை தமது போராட்டம் படிப்படியாக விஸ்தரிக்கப்படுமென தொழிற்சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க மாநகர சபை நிர்வாகம் சரியான பதிலை வழங்கத்தவறும் பட்சத்தில் சுகாதாரப்பகுதியின் அனைத்து சேவைகளும் ஸ்தம்பிதமடையுமென அஞ்சப்படுகிறது.

இதேவேளை யாழ் மாநகர மேயர் ரவிராஜ் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணம் வருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. [ந-12

## வவுனியாவுக்குள் 82நோயாளர்கள் வந்தனர்

[கொழும்பு]

கிளிநொச்சி, மல்லாவி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் இராணுவக் கட்டுப்பாடற்ற வவுனியா ஆகிய பிரதேசங்களில் இருந்து கடந்த வாரம் 82 நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக வவுனியா வைத்திய சாலைக்கு வந்துள்ளதாகவும் 57 நோயாளர்கள் சிகிச்சைகளின்பின் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு திரும்பி உள்ளதாகவும் ஊடகத்தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9)

# 15 ஆயிரம் மில்லியன் கடன் பெறல்

(கொழும்பு)

மிக மோசமான நிதி நெருக்கடி காரணமாக அரச வங்கிகளிடமிருந்து அரசு தனது தேவைக்காக 15 ஆயிரம் மில்யன் ரூபாவைப் பெற்றுள்ளது.

மக்கள் வங்கியிடமிருந்து 9 ஆயிரம் மில்லியன் ரூபாவையும் இலங்கை வங்கியிடமிருந்து 4 ஆயிரம் மில்லியன் ரூபாவையும் ஊழியர் சேமலாப நிதியிலிருந்து 2 ஆயிரம் மில்லியன் ரூபாவையும் அரசு தனது தேவைக்காக பெற்றுள்ளது.

இது 1999 ஆம் ஆண்டில் எடுத்த தொகையைவிட பத்து வீதம் அதிகமாகும்.

(உ-5)

# நிர்வாகிகள் தெரிவு

(ஊர்காவற்றுறை)

உடுவில் இளைஞர்கழகங்களின் பிரதேச சம்மேளன இவ்வருடத்திற்கான புதிய நிர்வாக சபைத் தெரிவு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ் சுன்னாகம் நகேஸ்வரி வித்தியாலயத்தில்செல்வன் சி பீஸ்மன் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வினை இளைஞர் சேவை அதிகாரி சு. கணபதிப்பிள்ளை கலந்து கொண்டு நெறிப் படுத்தினார்.

புதிய நிர்வாகத்தின் தலைவராக செ. ஜெயரூபன், உபசெய லாளராக சோ.கரிகஜன்' உபதலைவராக சி பீஸ்மன், பொருளாளராக அ யூட்சன்ஆகியோருடன் பிரிவுத்தலைவர்கள் 4 பேரும்தெரிவுசெய்யப்பட்டனர். (உ-75)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

பெப் மாதம்2 3- ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப் பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 170749 ஏ | 173337 ஏ |
| 173337 பி | 177973 ஏ |
| 177973 பி | 177974 ஏ |
| 180520 ஏ | 183665 ஏ |
| 183665 பி | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 135007 ஏ | 151425 ஏ |
| 151425 பி | 153897 ஏ |
| 155065 ஏ | 155654 ஏ |
| 158235 ஏ | 158235 பி |
| 159901 ஏ | 159901 பி |
| 159901 சி | 159901 டி |
| 164576 ஏ | 164576 பி |
| 164841 ஏ | 164841 பி |
| 165097 ஏ | 168163 ஏ |
| 169518 ஏ | 169518 பி |
| 169857 ஏ | 169857 பி |
| 169857 சி | 172271 ஏ |
| 172271 பி | 174518 ஏ |
| 176465 ஏ | 176465 பி |
| 177810 ஏ | 1778.0 பி |
| 177810 சி | 177810 டி |
| 177886 ஏ | 177891 ஏ |
| 177917 ஏ | 177917 பி |
| 177917 சி | 177911 டி |
| 177921 ஏ | 177921 பி |
| 177938 ஏ | 180386 ஏ |
| 180386 பி | 180391 ஏ |
| 180391 பி | 180394 ஏ |
| 18.394 பி | 189894 சி |
| 180414 ஏ | 180414 பி |
| 180414 சி | 180419 ஏ |
| 180416 பி | 180429 ஏ |
| 180429 பி | 180456 ஏ |
| 180456 பி | 180486 ஏ |
| 180607 ஏ | 181079 ஏ |
| 181081 ஏ | 181081 பி |
| 181081 சி | 181081 டி |
| 181324 ஏ | '82217 ஏ |
| 892217 பி | 182217 சி |
| 182217 டி | 182217 ஈ |
| 182232 ஏ | 182232 பி |
| 182232 சி | 182240 ஏ |
| 182256 ஏ | 182256 பி |
| 182257 ஏ | 182257 பி |
| 182343 ஏ | 182343 பி |
| 182389 ஏ | 182389 பி |
| 183528 ஏ | 183528 பி |
| 183532 ஏ | 183672 ஏ |
| 183673 ஏ | 183676 ஏ |
| 183676 பி | 183626 ஏ |
| 183726 பி | |

### கோப்பாய்

| | |
|---|---|
| 154507 ஏ | 154507 பி |
| 154507 சி | 162932 ஏ |
| 161932 பி | 166991 ஏ |
| 166991 பி | 168255 ஏ |
| 168255 பி | 173866 ஏ |
| 173382 ஏ | 173383 ஏ |
| 173383 பி | 173390 ஏ |
| | 173390 பி |
| 173393 ஏ | 173393 பி |
| 177210 ஏ | 177210 பி |
| 179538 ஏ | 179603 ஏ |
| 179637 ஏ | 179637 பி |
| 179668 ஏ | 179680 ஏ |
| 179755 ஏ | 179764 ஏ |
| 179764 பி | 179767 ஏ |
| 179767 பி | 179769 ஏ |
| 179769 பி | 179769 சி |
| 179778 ஏ | 180629 ஏ |
| 180629 பி | 180629 சி |
| 180629 டி | 180629 ஈ |
| 180630 ஏ | 180738 ஏ |
| 180738 பி | 180738 சி |
| 180738 டி | 180738 ஈ |
| 180738 எவ் | 18 763 ஏ |
| 180763 பி | 180785 ஏ |
| 180787 ஏ | 180809 ஏ |
| 180892 ஏ | 180904 ஏ |
| 180908 ஏ | 180908 பி |
| 180908 சி | 180942 ஏ |
| 180942 பி | 180949 ஏ |
| 180949 பி | 180082 ஏ |
| 180982 பி | 180083 ஏ |
| 181017 ஏ | 181017 ஏ |
| 181017 சி | 181917 டி |
| 181017 ஈ | 181025 ஏ |
| 181031 ஏ | 182888 ஏ |
| 182888 பி | 182888 சி |
| 182900 ஏ | 182908 ஏ |
| 182929 ஏ | 182929 பி |
| 184027 ஏ | 184037 ஏ |
| 184043 ஏ | 184053 ஏ |
| 184053 பி | 184071 ஏ |
| 184075 ஏ | 184077 ஏ |
| 184090 ஏ | 184090 பி |

### மருதங்கேணி

| | |
|---|---|
| 180535 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 156888 ஏ | 167666 ஏ |
| 167666 பி | 167771 ஏ |
| 167771 பி | 170730 ஏ |
| 170730 பி | 170730 சி |
| 170730 டி | 170738 ஏ |
| 170905 ஏ | 170907 ஏ |
| 170919 ஏ | 170938 ஏ |
| 170939 ஏ | 170940 ஏ |
| 170941 ஏ | |
| 170945 ஏ | 170944 ஏ |
| 170945 ஏ | 171311 ஏ |
| 171410 ஏ | 171411 ஏ |
| 171426 ஏ | 171420 ஏ |
| 171416 ஏ | 171437 ஏ |
| 171452 ஏ | 171457 ஏ |
| 171465 ஏ | 177174 ஏ |
| 177188 ஏ | 177195 ஏ |
| 177197 ஏ | 177197 பி |
| 177197 சி | 177198 ஏ |
| 177595 ஏ | 177295 பி |
| 179672 ஏ | 179704 ஏ |
| 179704 பி | 179704 சி |
| 179709 ஏ | 179711 ஏ |
| 179711 பி | 179719 ஏ |
| 179719 பி | 179719 சி |
| 179737 ஏ | 179737 பி |
| 179737 சி | 179758 ஏ |
| 179758 பி | 179758 சி |
| 184954 ஏ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 146784 ஏ | 146784 பி |
| 150916 ஏ | 150916 பி |
| 154940 ஏ | 155783 ஏ |
| 155783 பி | 155783 சி |
| 160055 ஏ | 160055 பி |
| 160227 ஏ | 164418 ஏ |
| 194418 பி | 164418 சி |
| 169503 ஏ | 269505 ஏ |
| 172336 ஏ | 172336 பி |
| 172336 சி | 172358 ஏ |
| 172358 பி | 174672 ஏ |
| 174672 பி | 174672 சி |
| 174686 ஏ | 174686 பி |
| 176430 ஏ | 176130 பி |
| 176334 ஏ | 177797 ஏ |
| 177806 ஏ | 177806 பி |
| 177806 சி | 177850 ஏ |
| 177850 பி | 177550 சி |
| 177850 டி | 177852 ஏ |
| 177932 ஏ | 177939 ஏ |
| 177939 பி | 177950 ஏ |
| 180402 ஏ | 180402 பி |
| 180402 சி | 180402 டி |
| 180446 ஏ | 180461 ஏ |
| 180469 ஏ | 182323 ஏ |
| 181343 ஏ | 181505 ஏ |

### உடுவில்

| | |
|---|---|
| 179661 ஏ | 179685 ஏ |
| 184029 ஏ | 184030 ஏ |
| 184033 பி | 184039 ஏ |
| 184041 ஏ | 184041 பி |
| 184045 ஏ | 184046 ஏ |
| 184058 ஏ | 184061 ஏ |
| 184065 ஏ | 184067 ஏ |
| 184072 ஏ | |

# திட்டமிடல் உத்தியோகத்தர் ஐம்பதுபே நியமனம்

(கொழும்பு)

வடக்கு- கிழக்குமாகாணத்தில் திட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றிவந்த ஐம்பது பேருக்கு திட்ட மிடல உதவிப்பணிப்பாளராக நியமனம்வழங்கப்பட்டுள்ளது.

கொள்கைத் திட்ட மிடல் அமைச்சர் பவித்ராவன்னியாராய்ச்சி இந்நியமனங் களை வழங்கியுள்ளார்.

கடந்த90ம் ஆண்டுவடக்கு-கிழக்கு மாகாண சபையினரால் பயிலுநர் பட்டதாரிகளாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் நடைபெற்ற பரீட்சைகளில் சித்தியடைந்து திட்டமிடல் உத்தியோகத்தர்களாக பிரதேச செயலகங்களில் கடமையாற்றிவந்தனர்.

தற்போதும் இவர்கள் பிரதேச செயலகங்களிலேயே சடமையாற்றவுள்ளமைகுறிப்பிடத்தக்கது. (செ)

# புனரமைப்புக் கூட்டம்

[ஊர்காவற்றுறை]

யாழ்ப்பாண இளைஞர் கழகங்களின் பிரதேச சம்மேளன புனரமைப்புக் கூட்டம் அண்மையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட இளைஞ சேவை அலுவலர் அ.சக்திவேல் தலைமையில் இடம் பெற்றது

இவ்வாண்டுக்குரிய புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம் பெற்ற போது ,தலைவராக நீ.பிரபாகரன், உபதலைவராகவி. வாகினி ,உபசெயலாளராக அ.அருள்பிரகாசன் பொருளாளராகத.விஜயகுமார் ஆகியோருடன் பிரிவுத் தலைவர்கள் 4பேரும் தெரிவு செய்யப்பட்டனர்

[உ-75]

# கருத்தரங்கு

[ஈச்சமோட்டை]

ஊர்காவற்றுறை கோட்ட பாடசாலை மாணவர்களை ஒன்றிணைத்து மனித முன்னேற்ற நடுநிலையத்தினரால் சமூக விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் இடம் பெற்றது.

புனித அந்தோனியார் கல்லூரி சிறியபுஸ்ப மகளிர் வித்தியாலயம், புனித மரியாள் வித்தியாலயம், கரம் பொன் சண்முகநாத மகாவித்தியாலயம் ஆகியவற்றிலிருந்துசுமார் 150 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இக் கருத்தரங்கில் புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வணபிதா ஜே ஏ. ஜேசுதாஸ் மற்றும் விழிப்புணர்வுக் குழு இணைப்பாளர் ஜோசப்பாலா ஆகியோர் மாணவர்களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் உரைகளை நிகழ்த்தியதோடு சமூக மட்ட விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஆறு நாடகங்களும்மாணவர்களால் மேடை ஏற்றி வைக்கப்பட்டன.

(உ-59)

# பொன் விழா

(கல்வயல்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வர்த்தகத்துறைத் தலைவர் க. தேவராஜா கல்வி சமய, கலாசார, சமூக மேம்பாட்டிற்கு ஆற்றிய சேவைகளைச் கௌரவிக்கும் முகமாக பொன்விழா கொண்டாடுவதற்கு தேவா பொன் விழாச்சபை'' என ஒருசபை முன்னாள் இந்துக் கல்லூரி அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் அமைக்கப்பட்டு ஏற்பாடுகளைக் கவனித்து வருகின்றது. (உ-111)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

பொன்னம்பலம் துரைசிங்கம்

தோற்றம் 07 - 01 - 1936 மறைவு 26 01 - 2001

எங்கள் அன்பின் ஆருயிர்த் தெய்வமே!
நீங்கள் எங்களை ஆளாக்கி
அன்பையும் அறிவையும் ஊட்டி
பாரினிலே எமை தவிக்க விட்டுச்
சென்றதுவும் ஏனோ?
ஆண்டு பல சென்றாலும் - எம்
நெஞ்சைவிட்டு உங்கள்
நினைவு ஒரு போதும் அகலாது!

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்து எமது துயரில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியைக்கூறுவதுடன் (25-02-2001) இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

குடும்பத்தினர்

402, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (2563)



உ
சிவமயம்

# வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்,

30 08-2000 புதன்கிழமை சிவபதமடைந்த

அமரர்

கந்தையா யோகநாதன்

(தோற்றம்: 26-11-1964 மறைவு: 30-08-2000)

அவாகளின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 25 - 02 - 2001 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

போட்டோ செல்வம்
கரவெட்டி கிழக்கு,
களச்சியாம் தோட்டம்.

(கி/1523)



# பிரிவுத் துயர் பகிர்வு

திருமதி நாகமுத்து சின்னம்மா

நிச்சாமம் சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சின்னம்மா நேற்று முன்தினம் அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னாரின் நல்லடக்கம் நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு விழா வெளி மைதானத்தில் இடம் பெற்றது.

தகவல்
நா. குணபாலசிங்கம்
(மகன்)

# மூலநட்சத்திரத்தில் பிறந்தவரின் ஜாதகபலன்

# உறவினர்களுக்கு தோஷத்தை ஏற்படுத்துமா?

மூலநட்சத்திரத்தின் பதினைந்து பாகத்தின் பலாபலன்களை நோக்குவோம். முதலாம் பாகம் தந்தையையும் 2ம் பாகம் பெரிய தந்தையாரையும், 3ம் பாகம் சகோதரியின் கணவனையும், 4ம் பாகம் பேரனையும் ,5ம் பாகம் தாயையும், 6ம் பாகம் தாயின் சகோதரியையும் 7ம் பாகம் தாய் மாமனையும், 8ம் பாகம் சித்தியையும், 9ம் பாகம் சிறிய தந்தையையும், 10ம் பாகம் வீட்டுவளர்ப்பு [பசு, ஆடு போன்ற] மிருகங்களையும், 11ம் பாகம் வேலைக்காரரையும் 12ம் பாகம் பிறந்த குழந்தையையும், 13ம் பாகம் மூத்த சகோதரியையும் 14ம் பாகம் தாயின் தந்தையையும், 15ம் பாகம் தாயின் தாயையும்

## சோதிடபலன்

பாதிக்கின்றது இக்கூற்றுப் பொதுவாக மூல நட்சத்திரத்தில் பிறந்த ஆண், பெண் இருபாலாருக்கும் சொல்லப்பட்டிருக்கிறது. ஞாயிற்றுக்கிழமையில் மூல நட்சத்திரத்தில்பிறந்தஜாதகன் தன்பிதாவுக்குத் தோஷத்தைக் கொடுப்பதாகவும், கணக்கிடப்படுகிறது.

### நாலுபாதங்கள்

மூலநட்சத்திரத்தின் முதலலாம் பாதத்தில் பிறந்தால் தந்தைக்குத் தோஷம் என்றும், 2ம் பாதத்தில் தாய்க்குத் தோஷம் என்றும், 3ம் பாதத்தில் பொருள் அழிவு உண்டாகும் என்றும் 4ம் பாதத்தில் சகல சௌக்கியமும் உண்டாகும் என்றும் ஜாதக தத்துவத்தில் கூறப்பட்டிருப்பதும் இங்கு நோக்கற்பாலதாகும். மூலநட்சத்திரத்தைவிட அயுக்த மூலத்தில்பிறந்தால் அக்குழந்தைக்கு கடுமையான தோஷம் ஏற்படுகின்றது என ஜாதகாபரணத்தில் கூறப்பட்டிருக்கிறது. கேட்டை நட்சத்திரத்தின் கடைசி நாழிகை ஒன்றும், மூலத்தின் ஆரம்ப நாழிகை இரண்டும் சேர்ந்ததான இம்மூன்று நாழிகைக் காலமே அயுக்த மூலம் எனப்படும் இக்காலத்தில் பிறந்த குழந்தையை எட்டு! அமாவாசை கழிந்த பின்பே தகப்பன் பார்க்கவேண்டும்.

### காலங்கள்

மூலநட்சத்திரத்துடன் கிருஷ்ணபட்சத்திருதியை, தசமி, சுக்கிலபட்ச பஞ்சமி ஆகியதிதிகள் செவ்வாய், சனி புதன் கிழமைகளுடன் சேர்ந்துள்ள தினத்தில் பிறந்துள்ள ஆண் குழந்தை அக்குலத்தையே நாசம் செய்து விடும் இக்காலம் பகலாக இருந்தால் தந்தைக்கும், மாலைக் காலமாக இருந்தால் தாய் மாமனுக்கும், இரவாக இருந்தால் வீட்டுவளர்ப்பு மிருகங்களுக்கும், காலையானால் நண்பர்களுக்கும் தோஷமுண்டாகும் என்று கூறியிருப்பதும், பெண்களுக்குமட்டுமல்ல ஆண்களுக்கும் தோஷமுண்டு என்பதைத் தெரிவிக்கிறது

### அங்க நாழிகைகள்

அத்துடன் ஜாதகாபரணத்தில் மூலநட்சத்திரத்தின் ஆதியந்த பரம நாழிகை 60 ஐயும் கணக்கிட்டு, ஒரு மனித உருவமாகக் கொண்டு பலன் கூறப்படுவது முண்டு. உருவ அங்கங்கள், நாழிகை என்பன. உச்சந் தலையில் 5 நாழிகையும் முகத்தில் 5 நாழிகையும், தோள்களில் 2 நாழிகையும், புஜங்களில் 8 நாழிகையும். கைகளில் 8நாழிகையும், இருதயத்தில் 8 நாழிகையும், தொப்பூளில் 2 நாழிகையும், இய்யத்தில் (மறைவிடம்) 10 நாழிகையும், முழங்காலில் 6 நாழிகையும். பாதங்களில் 6 நாழிகையும் கொண்டதாகக் கணக்கிடப்படுகிறது.

பிரம்மஸ்ரீ. எஸ். சுப்பிரமணிய ஐயர்

---

## புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பிற்கு

# இலங்கை அரசை இணங்கவைப்பதற்கு

# ஐரோப்பிய நாடுகள் முன்வரவேண்டும்

## மன்னார் ஆயர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிக்கு நல்லெண்ணம் காட்டிவருகின்ற இவ்வேளையில் அரசும் யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என்றும் இதற்கு ஐரோப்பிய நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று ஐரோப்பிய தூதுக் குழுவிடம் மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை மன்னார் மாவட்ட ஆயர் தலைமையிலான குழு ஐரோப்பிய தூதுக் குழுவைச் சந்தித்த போது வன்னி மக்களின் துன்ப துயரங்கள் தொடர்பாக வவுனியா பங்குத் தந்தை ஜெயபாலன் எடுத்துக் கூறி இருந்தார் இது தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்திருந்தார்.

அவ் அறிக்கையில், இடம் பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களிலும், அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்து வருகிறார்கள்.

இவர்களின் தேவைகள் உரிய விதத்தில் கவனிக்கப் பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதே வேளையில், விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை அரசாங்கம் ஏற்காதென பொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி. எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகள் மூன்றாவது தடவையாகவும் யுத்த நிறுத்தத்தை நீடித்திருக்கும் போது அரசு தனது முடிவில் இருந்து மாறப் போவது இல்லை என்றும், பேச்சுவார்த்தை ஒன்று நடைபெற்று முன்னேற்ற கரமான ஒரு நிலை ஏற்பட்டால் மட்டுமே அரசாங்கம் இது தொடர்பாக பரிசீலிக்கும் என்றும் கூறியுள்ளார்

விடுதலைப் புலிகள் முதற் தடவையாக யுத்த நிறுத்தத்தை அறிவித்த போதும் அரசு எடுத்த முடிவில் எந்த விதமான மாற்றமும் செய்யப்படவில்லை என்று தெரிவித்த அமைச்சர் மூன்றாவது தடவையாக அறிவித்த யுத்த நிறுத்தத்தை நிராகரித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த அறிவிப்பை ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்கா மூன்றாவது தடவையாக நிராகரித்தது ஏற்கனவே தெரிந்ததே. (க-05)

# ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகள் வன்னிக்கு செல்ல வேண்டும்

## அ இல. த. கா. பிரமுகர்கள் கோரிக்கை

[கொழும்பு]

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இடம் பெற்று வரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பகுதியை ஐரோப்பிய யூனியன் பாராளுமன்ற பிரதிநிதிகள் சென்று பார்வையிட வேண்டுமென அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலர் கலாநிதி த. குமரகுருபரன் காலம் சென்ற குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திரகுமார், காங்கிரஸ் உப தலைவர் எஸ் நடராசா ஆகியோர் ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளை சந்தித்த போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.

இச்சந்திப்பின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யும் விதத்தில் பிரிட்டன் நிதானமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பிரிட்டன் விடுதலைப்புலிகளை தடை செய்யுமாயின் ஏனைய நாடுகளும் இம்முயற்சியில் ஈடுபடும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர். (க-வ)

## விரிவுரையாளர் கௌரவிப்பு

[யாழ்ப்பாணம்]

பட்டப் படிப்புகள் கல்லூரியில் பயிலும் யா/பல்கலைக் கழகவெளிவாரிஇறுதியாண்டு வணிகமாணி மாணவர்களால்விரிவுரையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று நண்பகல் 12 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யா/பல்கலைக் கழக வணிகத்துறைத் தலைவர் என். தேவராஜா, சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர். இரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## நாவாந்துறையில்

# சத்துணவுத்திட்டம் மூலம் 80 சிறுவர் பயனடைவு

(யாழ்ப்பாணம்)

யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் வண்ணார் பண்ணை நாவாந்துறை, சந்தர் மடம் போன்ற பகுதிகளில் நடை முறைப் படுத்தப் பட்டுள்ள போஷாக்குணவுத் திட்டத்தின் மூலம்கர்ப்பிணித் தாய்மார், சிறுவர்கள் ஆகியோர் பெரும் பயனடைந்து வருகின்றனர்

இத்திட்டத்தின் கீழ்நாவாந்துறை போஷாக்குணவு நிலையத்தின் மூலம் 80 சிறார்களும், 40 கர்ப்பிணித் தாய்மாரும் பயனடைந்து வருகின்றனர்.

1997 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் இத் திட்டத்தின் மூலம் வாரத்தில் 5 நாட்கள் சத்துணவு வழங்கப்பட்டுவருகிறது. (உ)

# திட்டமிடல் சேவைக்கு நூற்றிப்பன்னிரெண்டுபேர்

இலங்கைத் திட்டமிடல் சேவைக்கு நூற்றிபன்னிரெண்டு பேர்தெரிவு செய்யப் படவுள்ளனர்.

கடந்த ஆண்டு நடத்தப் பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளுக்கு அமைய வே இத் தெரிவு இடம் பெறவுள்ளது.

இன விகிதாசாரப்படி தொண்ணூற்றி ஒரு சிங்களவர்களும், பதின்மூன்று தமிழர்களும், எட்டு முஸ்லிம்களும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை, பயிற்சி நெறி என்பன; வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஆரம்பமாகவுள்ளது. [செ]

---

## இராசி பலன்

25 02 2001
(மாசி 13, ஞாயிறு)
துதியை பி.ப 509 வரை
பூரட்டாதி மு.ப 9.56 வரை
ராகுகாலம் 5 00 - 6.00
சுபநேரம் 9.30 -11 .00
சித்தாமிர்தம்

**மேடம்**
உணர்ச்சி வசப்படல், சுப செலவு பிரயாணம், கலந்துரையாடல்.

**இடபம்**
விருந்துபசாரம், தனலாபம், கௌரவம், காரியம் கைகூடல்.

**மிதுனம்**
சுப நிகழ்ச்சி, தொழில் மேன்மை, முயற்சி கைகூடும், உறவினர் வெறுப்பு.

**கடகம்**
ஓய்வுநிலை, காரியம் தாமதம், பிரயாணம், உடல் நலக் குறைவு.

**சிங்கம்**
அலைச்சல், வீண் பிரச்சினை, முயற்சி தடங்கல் அமைதி குறைவு.

**கன்னி**
காரியம் கைகூடும், சுவாரசியம், தனவரவு, போசன சுகம்.

**துலாம்**
வேடிக்கை, கலந்துரையாடல், புதிய முயற்சி, நோய் குணமடைதல்.

**விருச்சிகம்**
குடும்பக் கவலை முயற்சி தாமதம், தாழ்வு நிலை உறவினர் சந்திப்பு.

**தனுசு**
அரச நன்மை, பயந்த சுபாவம், தன்னம்பிக்கை குறைவு, முயற்சி தாமதம்.

**மகரம்**
பணவரவு, காரியவெற்றி' அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

**கும்பம்**
காரிய தாமதம் பொருள் விரையம், கலந்துரையாடல், சுகக் குறைவு.

**மீனம்**
சுப நிகழ்ச்சி, விற்பனை மிகுதி, ஜன வசியம், சயன சுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## பொதுக் கூட்டம்

[ஈச்சமோட்டை]

பண்ணாகம் தெற்கு ஐக்கிய நாணய சங்கத்தின் 70-வது வருடாந்த பொதுக்கூட்டம் இன்று 3 மணிக்கு வைத்தியர் செ. வைத்தியலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-59)

## இறைதத்துவ...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பது மக்களின் ஒழுக்கத்தை உயர்த்துவதாக அமைய வேண்டும். அனைத்து சமயங்களும் அன்பு, இரக்கம், வாய்மை போன்ற பண்புகளைப் போதிக்கின்றன. எனவே சமயங்களிடையே வேற்றுமை காண்பது தவறு. வேற்றுமையில் ஒற்றுமை காண வேண்டும் இயற்கையில் எந்த இரு பொருள்களும் ஒரே மாதிரியமைவதில்லை வேற்றுமை என்பது தான் இயற்கையின் நியதி. இவ் வேற்றுமைகளிற்கூடாக மறைந்திருக்கும் இறைத்தன்மை எனும் ஒற்றுமையைக் காண்பதே அறிவுடையோர் செயல்'' என்பதே ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் உலகிற்குக் கொண்டு வந்த செய்தி என்றுசுவாமி விவேகானந்தர் பறை சாற்றினார்.

''ஜெய் ஸ்ரீ குருமஹாராஜ் ஜிற்கு, ஜெய்''

# வெவ்வேறு விபத்துக்களில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம)

இருபாலைப் பகுதியில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றில் காயமடைந்த கொடிகாமம் பிரதேசசபை பணியாளரான கொடிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து கோண்டாவிலில் வசித்து வரும் ஆசீர்வாதம் கிறிஸ்து ராசா (வயது 49) யாழ்ப்பாணம் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நடந்து சென்ற வேளைவீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கடந்த வியாழன மாலை நீர்வேலிப் பகுதியில் துவிச்சக்கர வண்டிகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதுண்டதில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்துரை கந்தையா (வயது66) என்பவரும்காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-12]

## பயண அனுமதி கிடைக்காமையால் கருத்தரங்கை தவறவிட்ட கல்விப்பணிப்பாளர்கள்

(யாழ்ப்பாணம்)

இசுருபாயா பந்தரமுல்லையில் இடம் பெற்ற மாவட்ட கல்வி அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கில் யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று கல்விப்பணிப்பாளர்கள் பயண அனுமதி கிடைக்காமையால் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழன் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் தீவகக் கல்வி வலயப் பணிப்பாளரும் வலிகாமம் கல்விப்பணிப்பாளருமே கலந்து கொண்டவர்களாவர்.

இதேவேளை வடக்கு கிழக்குமாகாணகல்விப்பணிப்பாளர்சி. சிவானந்தன் மேற்படிகருத்தரங்கு தொடர்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள 5கல்விவலயப் பணிப்பாளர்களுக்கும் கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-12)

## இடம் பெயர்ந்தோருக்கு வீடுகள் அன்பளிப்பு

[வவுனியா]

அவுஸ்திரேலியா தூதுவர் பீற்றர் றோ வெள்ளி வவுனியாவுக்கு விஜயம் செய்து பெரிய கோமரசன் குளப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்காக 50 வீட்டுத்திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகளை கையளிக்கும் வைபவத்தில் கலந்துகொண்டார்.

தென் ஆசிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கட்டிமுடிக்கப்பட்ட 50 வீடுகளும் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இவ் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

இவ்வைபவத்தில் வடபகுதி அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு பிரதி அமைச்சர் அ சுமதிபாலா வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் ஆகியோரும் சலந்து கொண்டனர். (வ)

## வவு.கல்வியியல் கல்லூரி பதிவுகளால் தாமதம்

[வவுனியா]

வவுனியா கல்வியியல்கல்லூரியில் அனுமதிபெற்ற புதிய மாணவர்களில் யாழ்ப்பாணத்தைத் தவிர்ந்த ஏனைய மாணவர்கள் அனைவரும் தமது பதிவுகளைமேற்கொண்டுள்ளனர்.

வவுனியாகல்வியியல் கல்லூரியில்பதிவுசெய்வதற்குகடந்த வியாழன் கடைசி நாளாக இருந்த போதும் யாழ்ப்பாணத்தில்இருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு உரிய நேரத்தில் பயண அனுமதிகிடைக்காமையினாலேயே அவர்கள் பதிவுகள் இடம் பெறவில்லை.

இதனைஅடுத்து இம்மாணவர்கள்அனைவரும் 26ம்திகதியளவில் வவுனியா செல்லவுள்ளனர். வவுனியா கல்வியியல்கல்லூரிக்கு இவ்வருடம் 250மாணவர்கள் தெரிவு செய்யப் பட்டிருந்தனர்.

இதேவேளைபழைய மாணவர்கள் புதிய மாணவர்களை தமிழ் கலாச்சார மரபின்படி வரவேற்று உபசரித்தனர். [வ]

## கட்டுப்பல் சிக்கியதில் மூச்சுத்திணறி மரணம்

[கொழும்பு]

கட்டுப்பல் தொண்டையில் சிக்கியதால் அதனை மீட்டெடுக்க முடியாதுமூச்சுத்திணறி துடிதுடித்து மரணமானசம்பவம் ஒன்றுதம்புள்ளபகுதியில் உள்ள வைத்திய சாலையில் நிகழ்ந்துள்ளது.

64 வயதுடைய ஆர். பி. திஸாநாயக்கா என்ற நபரே மேற்படிசம்பவத்தால் மரணமடைந்தார் இரவு வேளை இடியப்பம் சாப்பிட்டபோதே இக் கட்டுப்பல் ஷெட்சமன்று தொண்டையில் சிக்கியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [செ 9]

## நிலாவுக்குச் சென்றவர் ஸ்ரீலங்கா விஜயம்

(கொழும்பு)

சந்திரனில் காலடி எடுத்து வைத்த இரண்டாவது நபராகக் கருதப்படும் எட்வின் ஒல்ட்ரின் இலங்கை வரவுள்ளார்.

நீல் ஆம்ஸ்ட் ரோங்கிற்கு பின்பு இரண்டாவது தடவையாக சந்திரனில் காலடி எடுத்து வைத்து உலகின் கவனத்தைக் கவர்ந்த எட்வின் ஒல்ட்ரின் இலங்கை வந்து எதிர்கால விண்வெளித் திட்டங்கள் குறித்து தனது கருத்தைப் பகிர்ந்து கொள்வார் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

இவர் இலங்கையில் மிக பிரபல்யமான விஞ்ஞானப் புனைக்கதை எழுத்தாளர் ஆர்தர் சி கிளார்க்குடன் இணைந்து செய்தியாளர் மாநாடொன்றில் கலந்து கொள்வார் என தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-09)

## வளலாய் சந்தையில்

# வழமையான பணிகள் இடம்பெற உதவுமாறு கோரி மகஜர் கையளிப்பு

(ஆவரங்கால்)

வளலாய் பொதுச் சந்தையில் வழமையான பணிகள் நடத்த ஆவன செய்யுமாறு மேற்படி பகுதிப் பொதுமக்கள வலி கிழக்குப் பிரதேச சபைத்தலைவருக்கு மகஜர் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

கடந்தகால போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மேற்படி சந்தை 3 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு, வலி கிழக்குப் பிரதேச சபையினால் தனியார் ஒருவரிடம் குத்தகைக்கு விடப்பட்டது.

ஆனால் குத்தகைக்கு பெற்றவரோ தனி உரிமையுடன் சந்தைக் கட்டடத்தை தனது சுய தேவைகளிற்கும் பயன் படுத்தி வருவதனால் பொது மக்களின் வாங்குதல் விற்றல் செயற்பாடுகளுக்கு குந்தகம் ஏற்பட்டு வருகிறது.

இதனையடுத்தே மேற்கண்ட மகஜர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (உ-57)

## குடும்பப்பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

கடந்தவருடம் நாச்சிமார் கோவிலடிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் படுகாயமடைந்து யா/போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண்மணி கடந்த புதனன்று அங்கு மரணமானார்.

கடந்தவருடம் டிசம்பர் மாதம் புஸ்பமலர் (வயது 42) என்ற பெண்மணி தனது கணவருடன் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை பேருந்துடன் மோதியதில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-12)

## இளம் விதவைகள் தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் ஒன்றிணைந்து பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாவிடின் இளம் விதவைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்குமென ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எம் அப்துல்மஜீத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நிகழ்ந்திய கன்னி உரையின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (உ-4)

## சமுர்த்தி செயலணி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/ 107 கிராம அலுவலர் பிரிவில் சமுர்த்தி செயலணிக் கூட்டம் இன்று பி. ப. 4. 30 மணிக்கு திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலய முகாமையாளர் ந சிவகுமார் தலைமையில் நடைபெறும், மேற்படி கூட்டத்திற்கு இக்கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த 18இற்கும் 35இற்கும் இடைப்பட்ட இளைஞர் யுவதிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு இப்பகுதிசமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கேட்டுள்ளார். உ-15)

## கட்டாக்காலி நாய் ஒழிப்பு

யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி நாய்களை ஒழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதால், வளர்ப்பு நாய்களைக் கட்டி வைத்திருக்குமாறும் அதற்குரிய அனுமதி இலக்கத் தகட்டினை பிரதேச சபை உப அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளுமாறும் நல்லூரர் பிரதேசசபை சம்மந்தப்பட்ட மக்களுக்கு அறிவித்துள்ளது. (உ)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் அமைய எழுது வினைஞர்களாக கடமையாற்றிய நால்வருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன. (உ-12

## வறிய மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்க ஏற்பாடு

(ஊற்காற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால் கண்பார்வை குறைந்தமாணவர்க்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கண்பார்வை குறைந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்ப மாணவர்களுக்கே முன்னுரிமை அடிப்படையில் மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளது என ஊர்காவற்றுறைப் பிரதேச சபைத் தலைவர் என். மதனராஜா தெரிவித்தார்.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை நிதியினைக் கொண்டு 100 மணவர்களுக்கு இவ்வாறு மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். [உ-75]

## ஈழத்து இலக்கியவாதி வ. அ. காலமானார்

(கொழும்பு)

ஈழத்து இலக்கிய த்துறையில வ. அ என அழைக்கப்படும் பிரபல எழுத்தாளர் வ. அ. இராசரத்தினம் நேற்று முன்தினம் அவரது சொந்த ஊரான மூதூரில் காலமானார். அவருக்கு வயது 76.

பயிற்றப்பட்ட ஆசிரியரான இவர் 1948ஆம் ஆண்டில் தினகரன் பத்திரிகை மூலம் தமிழ் இலக்கிய உலகில் பிரவேசித்தார்.

வடக்குக்- கிழக்கு மாகாண ஆளுநர் விருது உட்பட பல விருதுகளையும் இலக்கிய அமைப்புக்களது பாராட்டுக்களையும் இவர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ- 8)

## அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்கவும் ஐ.தே.க. எம்.பி கோரிக்கை

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தை இரண்டாயிரம் ரூபாவாலும், ஓய்வூதியர்களின் ஓய்வூதியம் எழுநூற்று ஐம்பது ரூபாவாலும் அதிகரிக்கப்பட வேண்டும என்று ஐ. தே. கட்சி எம். பி ஜோன் அமரதுங்க பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

விதவைகள், அனாதைகள், ஓய்வூதியத் திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதத்தின் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வாழ்க்கைச் செலவுகள், அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. அத்துடன் மின்கட்டணமும் உயர்ந்துள்ளது

எனவே சாதாரண மக்களையும், ஓய்வூதியர்களையும் காப்பாற்ற அரசாங்கம் சம்பள உயர்வு வழங்க வேண்டும் என இவர் கோரிக்கை விடுத்துள்ளார்: (செ)

## ரணில் பாராளுமன்றில் சூடாகக் கேள்வி

(கொழும்பு)

ரூபாவின் பெறுமதியை மிதக்கும் நிலையில் வைத்திருக்கும் தீர்மானம் அமைச்சரவையின் அனுமதியுடன் எடுக்கப்பட்டதா என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா அண்மையில் நாடாளுமன்றத்தில் சூடாகக் கேளவி எழுப்பியுள்ளார்.

ரூபாவின் பெறுமதியை மிதக்கும் நிலையில் வைத்திருப்பதற்கான காரணத்தை பிரதி நிதி அமைச்சர் ஜி. எல் பீரிஸ் விளக்கிய போதே ரணில் விக்கிரம சிங்கா மேற்கண்டவாறு கேள்வி எழுப்பி உள்ளார்.

இவ்வாறு அமைச்சர்களின் அனுமதி இன்றி ரூபாவின் பெறுமதியை மிதக்கும் நிலையில் வைத்திருப்பதனால் நாடாளுமன்றச் சட்டம் மீறப்பட்டுள்ளதாகவும் அத்துடன் அமைச்சர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தால் அதை உடனடியாக நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்க வேண்டும் என்றும் ரணில்விக்கிரமசிங்க அங்கு மேலும் கூறியுள்ளார். (க-04)

## ஈராண்டுகள் தடை

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியர் கூட்டங்களில் வாரியத்தின் முன்னாள் தலைவர் பிந்திரா கலந்து கொள்வதற்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

இருப்பினும் இம்முடிவு மறுபரிசீலனை செய்யப்படலாம் என சென்னையில் கிரிக்கெட் வாரிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [உ-08

## இன்று ஒரு தகவல்

# வார்த்தையும் பலித்துவிடும்

போஜராஜா ஒரு நாள் காளிதாசரைக் கூப்பிட்டு 'காளிதாஸ்! என்மேல் ஒரு பாட்டுப்பாடு' என்றார். 'நீ பாடும் பாட்டு எப்படியிருக்க வேண்டும் என்றால் நான் இறந்து போன பிறகு எந்த விதத்தில் பாடுவாயோ அதனை பாடு' என்று அரசன் கூறினான். போஜராஜனே! அப்படி இரங்கற்பா நான் பாடினால் நீ இறந்து விடுவாயே! என் நாவில் சரஸ்வதி இருக்கிறாளே! வேண்டாம் என்று காளிதாஸ் கூறினார்.

காளிதாஸ் மறுத்ததும் அரசருக்குக் கோபம் வந்து விட்டது. காளிதாசரைத் தேசப் பிரஷ்டம் செய்து விட்டார். கொஞ்ச நாளில் போஜராஜா ஐயோ நண்பன் போய் விட்டாரே என்று வருந்துகிறார். அவரைத் தேடிக் கொண்டு ராஜா புறப்பட்டார். குடுகுடுப்பைக் காரன் மந்திரி வேஷம் போட்டுக் கொண்டார்.

அங்கு ஒரு மாமிசக் கடை. அந்த சந்நியாசி கசாப்புக் கடைக்காரரிடம் 'இந்தக் கறி என்ன விலை?' என்று விளையாட்டாகக் கேட்டார். இதைப் போசராஜா பார்த்தார். இவர் தான் காளிதாஸ் என்று புரிந்து கொண்டார். ஆயின் காளிதாசருக்கு இவர் தான் போஜராஜா என்று அறிந்து கொள்ள முடியவில்லை. ராஜா ஏ! சந்நியாசி! நீ காவித் துணி கட்டிக் கொண்டு, உருத்திராட்சம் அணிந்திருக்கிறாயே! மாமிசம் சாப்பிடலாமா என்று கேட்டார். அவர் மது அருந்துகின்ற எனக்கு மாமிசம் தேவைப்படுகிறது என்று ஒரு படி அதற்கு மேலான வார்த்தையைக் கூறினார். 'மதுவும் உண்பாயோ?' என்று அரசன் கேட்க மங்கையோடு இருக்கும் எனக்கு மது, மாமிசம் தேவை என்று காளிதாஸ் பகன்றார் ஏன் உங்கள் ஊரில் இவ்வாறு நடக்காதா? நீங்கள் எந்த ஊர்? என்று கேட்டார்.

ராஜா நான் தாராநகரம் என்று கூறியவுடன் என் ஆப்த நண்பர் போஜராஜா சௌக்கியமாக இருக்கிறாரா? என்று சந்நியாசி கேட்டார்.

'நேற்றுத்தான் அவர் இறந்து விட்டார்' என ராஜா கூறினார். காளிதாஸர் உடனே தாரை தாரையாகக் கண்ணீர் விடத் தொடங்கி ஒரு சுலோகம் பாடினார். சரஸ்வதிக்குப் பற்றுக்கோடு இல்லாமற் போய் விட்டது. என்னைப் போன்ற புலவர்கள் இனிக்கண்டிக்கப் படுவார்கள் போஜராஜா! நீ மோட்சலோகம் போய் விட்டாயே! என்று காளிதாஸர் கூறக் கேட்ட போஜராஜா உடனே கீழே விழுந்து இறந்து விட்டார். பிறகு, காளிதாஸர் நண்பரை உயிர்ப்பிக்க வேண்டினார்.

சரஸ்வதிதேவி கூறினார் 'பிழைக்கவைக்கிறேன். ஆயினும் முற்றிலும் ஆயுள் தரமாட்டேன், ஏழரை நாழிகைக்கு ஆயுள் தருகின்றேன்; ஏழரை நாழி பொறுத்து மறுபடியும் இறந்து விடுவார்'. என்று போஜராஜா மறுபடியும் பிழைத்துக் கொண்டார்.

தனக்கு ஏழரை நாழி தான் (மூன்று மணி நேரம்) என்று அறிந்த போஜராஜா 'எனக்கு ஏழரை நாழி தான் ஆயுளா? ஒரு விநாடி கூட வீணாக்கக் கூடாது. காளிதாஸரே! உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறேன். நீயும் நானும் சேர்ந்து ஒரு ராமாயணம் பாடலாம்' என்றார். மாற்றி மாற்றி இவர் கொஞ்சம் பாடுவார். அவர் கொஞ்சம் பாடுவார். அவ்வாறு ஏழரை நாழிகையில் ராமாயணம் முழுவதும் பாடினார்கள். அதற்குப் போஜசம்பு என்று பெயர். ஏழரை நாழிகை முடிந்தது. போஜ ராஜா இறந்து விட்டார். அவர் பாடிய போஜசம்பு இறக்கவில்லை.

திருமுருக கிருபானந்த வாரியார்

பிரிட்டன்

# புலிகளுக்கு வழங்கும் அனுமதியே தமிழ் இனத்திற்கான அங்கீகாரம்

## கிழ.பல்கலை சமூகம் தெரிவிப்பு

[கொழும்பு]

''பிரிட்டிஷ் அரசாங்கம் விடுதலைப்புலிகளுக்கு வழங்கும் அனுமதி தமிழ் இனத்திற்கு கிடைக்கும் அங்கீகாரமே''

இவ்வாறு கிழக்குப் பல்கலைக் கழக சமூகத்தால் பிரிட்டிஷ் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, பிரிட்டிஷ் நாட்டுச் சட்டங்களை மதித்து நடக்கும் விடுதலைப் புலிகள், பிரித்தானியாவில் தொடர்ந்தும் செயற்படுவதற்கு அனுமதிக்க வேண்டும்.

நீங்கள் வழங்கும் அனுமதியும் ஆதரவும் தமிழ் பேசும் சிறுபான்மையினராகிய எங்களுக்கும் எங்கள் எதிர்கால சந்ததியினருக்கும் கிடைக்கும் சர்வதேச அங்கீகாரமாகவே கருதுகிறோம் என்றும் அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இருவாரங்களாக கிழக்குப்பல்கலைச் சமூகத்தால் பொதுமக்கள் மத்தியில் கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ)

## சடலம் கரை ஒதுங்கியது

(கொழும்பு)

திருகோணமலைத்துறைமுகப் பகுதிக்கு அண்மித்தஉவர் மலைக் கடற்கரையில்கடந்த வெள்ளி பெண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

சுமார் 60 வயது மதிக்கத்தக்க இப் பெண்ணின் சடலத்தில்காயங்கள் எதுவும்இல்லை என்றும், பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (செ)

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

அரியாலையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் குலேந்திரராஜா [வயது19] என்பவர் அவரது வீட்டில் வைத்து கடந்த வியாழனன்று கைது செய்யப்பட்டு 512 வது இராணுவப் பிரிவுமுகாமில்தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவரது கைது தொடர்பாக படையினரால் பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டுள்ளது.

(உ-2-6)

## நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கடந்த கால வன்முறைகள் காரணமாகஇயங்காதிருக்கும் வண்ணார்பண்ணை கலைவாணி சனசமூக நிலையத்தையும் அதனோடு இணைந்த பொன்னப்ப சுவாமியார் ஆலயத்தையும் புனரமைப்புச் செய்யும் நோக்கில் புதிய நிர்வாக சபைத் தெரிவு இன்று பி.ப. 3.30 மணிக்கு காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது. (உ)

## கைக்குண்டு வெடித்து விவசாயிமரணம்

(கொழும்பு)

பதுளைப் பகுதியில் உள்ள அப்புத்தளை என்னும் இடத்தில் கைக்குண்டு ஒன்று வெடித்ததில் 32 வயதினை உடைய ஏசுனில் பண்டார என்னும் விவசாயி மரணமடைந்துள்ளார். (உ-9)

## விண்ணப்பிக்குக

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டைஜே.133 கிராம அலுவலர் பிரிவில் விசேட அடையாள அட்டை தொலைந்தவர்களை, மீளவும் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்குமாறு மேற்படி பிரிவு கிராம அலுவலர் தெரிவித்துள்ளார்.

[செ-125[

## சண்டிலிப்பாயில் 56 இலட்சம் செலவில் அபிவிருத்தி முயற்சி

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பத்து அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வதற்கு 56 இலட்சம் ரூபாவை யாழ்ப்பாணத்தில் செயற்படும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதராலயம் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய் அரசினர் கலவன் பாடசாலை, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க கலவன் பாடசாலை, மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக் கட்டடங்கள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை விவசாயிகள், மற்றும் கடற்றொழிலாளர்கள் போன்றோருக்கு சுழற்சி முறையில் கடன் முயற்சிகளை வழங்குவதற்கென 10 லட்சம் ரூபா நிதியில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

[உ-05]

## விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து மேட்டுநில பயிற்செய்கையில்தற்போது ஈடுபட்டிருக்கும்விவசாயிகளில்தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு 5 ஆயிரம் ரூபா கடன் வழங்கும் திட்டம் ஒன்றை அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பச்சிலைப்பள்ளி இடம்பெயர்ந்தோர் நலன் காக்கும் அமைப்பு செயற்படுத்த உள்ளது.

மேற்படி திட்டத்தில் இணைய விரும்பும் பயனாளிகள் தமது சுயவிபரத்துடன் விண்ணப்பங்களை தயாரித்து செயலாளர், இடம்பெயர்ந்தோர் நலனோன்புச் சங்கம், இல-61, ஆனைக்கோட்டை வீதி, கொக்குவில் மேற்கு என்ற முகவரிக்கு தபாலில் விண்ணப்பிக்குமாறு இவ் அமைப்பின் செயலாளர் அ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி கடன் உதவிக்கு விண்ணப்பிப்போர் கட்டாயமாக பச்சிலைப்பள்ளி பிரதேசத்தை சார்ந்தவர்களாகவும், பயிர் செய்கையில் ஈடுபடுபவர்களாக இருக்க வேண்டுமெனவும்அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(உ-15)

## சிவராத்திரி தினத்தன்று விஷமிகளின் அட்டகாசம்

(சங்கானை)

சிவராத்திரி தினத்தன்று பக்தர்களின் நன்மை கருதி ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தமையை சில 'விஷமிகள்' தமது விஷமச் செயல்களுக்குப் பயன் படுத்திய சம்பவம் தொல்புரம் பகுதியில் நடந்துள்ளது.

வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய வீதி ஓரமாக கிடந்த மின் கம்பம் ஒன்றை சில விஷமிகள் பகீரதப் பிரயத்தனப்பட்டு வீதிக்கு குறுக்காக போட்டு வைத்தனர்.

இதனால் அன்றைய தினம் இரவு வீதியால் சென்றோர் பல இன்னல்களுக்கு ஆளாகினர்.

மறுநாள் அதிகாலை வேளை இவ்வீதியால் வந்த பேருந்து தொடர்ந்து பயணிக்கமுடியாது; சாரதி, நடத்துனர், பயணிகள் உதவியுடன் மின்கம்பத்தைவீதியில்இருந்து அகற்றினர்.

இதேவேளை சிவராத்திரி தினத்தன்று சித்தன்கேணியிலுள்ள சில வர்த்தக நிறுவனங்களில் மின் குமிழ்களைச் சேதப்படுத்தியும், அபகரித்தும் சென்றுள்ளனர்.

இத்தகைய விஷமத்தனங்கள் சிவராத்திரி தினத்தின் புனிதத்தன்மையை அவமதிப்பதுடன் எதிர் வரும் சிவராத்திரி தினங்களில் இரவு நேரம் கோவில்களுக்குச் செல்ல முடியாது போகலாம் என பொது மக்கள் தரப்பில் கருத்து தெரிவிக்கப்படுகின்றது.

(செ-124)

## வடமராட்சியில் வீதி ஒழுங்கு பேண பொலிஸ் நடவடிக்கை

[துன்னாலை]

வடமராட்சி நெல்லியடி நகரப்பகுதியில் காலை நேர வீதி ஒழுங்கில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் பலர் இப்பகுதியில் வசிப்பதனால் காலை வேளைகளில் மிகுந்தபோக்குவரத்துநெருக்கடி காணப்படுகிறது

இதனால் ஏற்படும் விபத்துக்களை தவிர்க்கும் வகையிலேயே பொலிஸார் வீதி ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

[உ-41]

புலிகளைத்

## தடைசெய்யக் கோருவது கோமாளித்தனமாகும்

[கொழும்பு]

விடுதலைப் புலிகளைத் தடைசெய்யுமாறுஜே.வி.பி. கோருவது கோமாளித் தனமானதும், கோழைத் தனமானதும், ஏகாதிபத்தியத்திடம் உள்ளூர் அமைப்பைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையும் ஆகும்.

இவ்வாறு நவசமசமாஜக் கட்சி செயலாளர் விக்கிரமபாகு கருணாரட்ண விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (செ)

## இடம் பெயர்ந்தோர் சங்க செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை தென்மராட்சி மக்கள் இடர்

(துன்னாலை)

தென்மராட்சிப்பகுதிஇடம் பெயர்ந்த மக்கள் நலன் கருதி உருவாக்கப்பட்ட தென்மராட்சி இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் செயற்பாடுகள் திருப்திகரமானதாய் இல்லையென சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

பொது மக்கள் தமது சொந்த இடங்களைச் சென்று பார்த்து வருவதிலோ, வர்த்தகர்கள் தம் சொத்துக்களை மீட்டு வருவதிலோ உரியவர்களுடன் தொடர்பு கொண்டு துரித நடவடிக்கை எடுக்க மேற்படி சங்கம் தவறுவதால் பொதுமக்கள் இதற்கான அனுமதியை நாடி, படைப்பிரிவு அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர்களை நாடி அலைவதாகவும்,

சங்கம், பொதுக் கூட்டங்களை நடத்தி மக்கள் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதில் கவனம் செலுத்துவதில்லை எனவும்தென்மராட்சி மக்கள் தெரிவித்துள்ளனர்.

[உ-14]

## தொடரும் புறக்கணிப்பு

[வவுனியா]

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து மேலதிக வைத்திய சேவைகளைப் பெறுவதற்காக வவுனியா செல்லும் நோயாளர்கள் வவுனியா வைத்தியசாலையில் புறக்கணிப்புகளுக்கு உள்ளாவதாக அங்கு சென்று வந்தோர் தெரிவித்துள்ளனர்.

(உ-7)

# உலக தரிசனம்

## இந்தோனேசியாவில்
# 140 முண்டங்கள் மீட்பு; பொலிஸ் பாதுகாப்பு
# மத்தியிலும் வன்முறைகள் தொடர்கின்றன

இந்தோனேசியாவில் தொடரும் மதக்கலவரங்களால் உயிரிழப்போர்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது

போர்னியோ தீவில் மிக மோசமாகப் பரவியுள்ள இனக் கலவரங்களினால் அங்கு வாழும் பூர்வீக நயாட் இனத்தவர் எதிராளிகளின் தலைகளைக் கொய்து தமது வெறியை வெளிக்காட்டி வருகின்றனர்.

இந்தவகையில் இதுவரை தலை கொய்து கொல்லப்பட்ட 140 பேரின் முண்டங்களைப் பொலிஸார் மீட்டுள்ளனர்

இதேவேளை, கலவரங்கள் தலைதூக்கியுள்ள இடங்களில் அதிகரித்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும், ஈட்டிகள், வாள்கள் சகிதம் நயாட் இனத்தவர் தமது கொலை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (உ-7)

## நாய்க்குச் சன்மானம்

(லண்டன்)

காணாமல் போனதனது நாயைகண்டுபிடித்துதருபவர்களுக்கு 64 ஆயிரம் அமெரிக்க டொலர் சன்மானம் தருவதாக ஹொங் கொங் நாய் வளர்ப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தனது நாயினை உயிரற்ற நிலையில் கொண்டு வந்தால் கூட அவர்களுக்கு 38 ஆயிரம் அமெரிக்க டொலர் தருவதாக அவர் உறுதியளித்துள்ளார். (உ-9)

## ராஜீவ்காந்தி கொலை வழக்கில்
# குற்றமற்றவர் என நிருபிக்கப்பட்ட இல.தமிழர்வெளிநாடுசெல்லஅனுமதி
## சென்னை உயர்நீதிமன்றம் வழங்கியது

[சென்னை]

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் இந்தியாவை விட்டு வெளியேறுவதற்கு சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ராஜீவ்காந்தி கொலை வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டவர்கள வேலூர் சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர், இவர்களில் ஒருவரே தான் வெளிநாடு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

ஈழப்போரில் தனது இடது காலை இழந்த நிலையில் ஜெய்ப்பூரில் சிகிச்சை பெற்று வந்ததாகவும் அப்போதுதான் ராஜீவ்காந்தி கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டதாகவும் அவர் தனது மனுவில் தெரிவித்திருந்தார்

இதனையடுத்தே நாட்டைவிட்டு வெளியேற அனுமதி வழங்கிய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சிவசுப்பிரமணியம் அவரது பயணத்திற்கான ஆவணங்களை வழங்குமாறும் உத்தரவிட்டுள்ளார். [உ-5]

## நிதிசேகரிப்பு நிகழ்வில் விருந்துண்ட விவகாரம்
# தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இல்லையென அமைச்சர்கள் மறுப்பு

(ரொறன்ரோ)

இலங்கையின் தீவிரவாத அமைப்புக்களுடன் தமக்கு தொடர்புகள் இல்லையென்று இருகனேடியநாட்டு அமைச்சர்கள் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி திரட்டும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டதாக குற்றம் சாட்டப்பட்ட மேற்படி அமைச்சர்கள் அதனை மறுக்கும் விதமாக மேற்கண்டவாறு கூறியுள்ளனர்

கனேடிய நிதியமைச்சர் போல்மாட்டீனும், சர்வதேச கூட்டுறவுக்கான அமைச்சர் மரியாமின்னாவும் விடுதலைப் புலிகளின் நிதிசேகரிப்பிற்கான இரவு விருந்தில் கலந்து கொண்டதாகவும்,

எப் ஐ சி ரி அமைப்பு தமிழீழ விடுதலைபுலிகளுக்கு நிதி சேகரிக்கும் அமைப்பொன்று கனேடிய தகவல் திணைக்களத்தால் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் கனேடிய வெளிவிவகார பேச்சாளர் மொண்டீஸ் குற்றம்சாட்டி இருந்தமை தெரிந்ததே. (உ-5)

## பிரான்ஸ் விருப்பம்

(புதுடில்லி)

குஜராத்தில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களைக் கட்டியெழுப்ப வீடுகளை மீண்டும் கட்டிக்கொடுக்கும் பணியை மேற்கொள்ள பிரான்ஸ் விருப்பம் தெரிவித்திருக்கிறது. (உ-8)

## விமானம் வீழ்ந்ததில் அனைவரும் பலி

(புதுடில்லி)

இந்திய விமானப் படைக்குச் சொந்தமானயுத்தவிமானமொன்று அஸாமாநிலத்தில் விழ்ந்து நொருங்கியதில் அவ் விமானத்தில் பயணம் செய்த இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

விமானியும், பயிற்சி விமானியுமாக இரு விமானப்படை வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்ட போதே மிக் 21ரக விமானம் விபத்துக்குள்ளானது.

அத்துடன் உலகில் நான்காவது பெரிய விமானப்படையைக் கொண்ட இந்தியாவில் கடந்த பத்து வருடங்களில் மிக் ரகத்தைச் சேர்ந்த 173 விமானங்கள் விபத்துக்குள்ளாகியமை குறிப்பிடத்தக்கது (க-4)

## வாஜ்பாய்க்கு அழைப்பு

(புதுடில்லி)

புதுடில்லி சென்றுள்ள கஸகஸ்தான் வெளியுறவு அமைச்சர் கின்சாங் நேற்று முன்தினம் வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்கை சந்தித்து இந்த ஆண்டு இறுதியில் கஸகஸ்தானில் நடைபெறவுள்ள மத்திய ஆசிய உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு பிரதமர் வாஜ்பாய்க்கு அழைப்பு ஒன்றினையும் விடுத்துள்ளார். (உ-)

# புனிதப் போர் என்ற பெயரில் பாக். காட்டுமிராண்டித்தனம்

(புதுடில்லி)

காஷ்மீரில் புனிதப் போர் என்ற பெயரில் பாகிஸ்தான் அரசு காட்டுமிராண்டித்தனத்தை அரங்கேற்றுகிறது

இவ்வாறு இந்திய ஜனாதிபதி கே ஆர். நாராயணன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தீவிரவாதிகளுக்குஎதிரான நடவடிக்கை தொடர்ந்தாலும்; வன்முறையைகைவிடும் தீவிரவாத அமைப்புகளுடன் அரசு பேச்சு நடத்ததயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

காட்டுமிராண்டித்தனமாக செயற்படும் தீவிரவாதிளுக்கு எதிரான நடவடிக்கைகளை மத்திய அரசு தீவிரப்படுத்தும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் எந்த ஒரு பிரச்சினையையும் சமாளிக்க இந்தியாதயாராகவுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளனர்

காஷ்மீரில் அமைதி நிலவுவதை விரும்பும் இந்தியா பாகிஸ்தானுடனும் சுமுகமான நட்புறவைப் பேணும் நடவடிக்கைகளிலும்ஈடுபட்டு வருகின்றது.

ஆனால் பாகிஸ்தான் இந்தியாவின் நேர்மையைப்புறக்கணிப்பதுடன், எல்லைக்கப்பால் இருந்து பயங்கரவாதத்தை தூண்டுவது இந்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது, ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றது.

பாகிஸ்தான் இப்படிச் செயல்படுகின்ற போது அதனுடன் எப்படி பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது?

பேச்சுக்கு தயாராகஇருப்பதாக கூறிக்கொண்டு காட்டுமிராண்டித்தனமான செயல்களில் ஈடுபடுகின்ற பாகிஸ்தானை கடுமையாக குற்றஞ் சாட்டியுள்ளார். ஜனாதிபதி கே. ஆர். நாராயணன். (செ)

## அபாயமான தலைவர்

(பக்தாத்)

ஈராக் தலைவர் சதாம் ஹுசைன் உலகில் மிகவும் அபாயகரமான தலைவர் என பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் வர்ணித்துள்ளார். (உ-3)

## 500 பேர் படுகொலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் மத்திய பகுதி ஒன்றில் நடைபெற்ற மோதலில் 500 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். [உ-3]

## ஜம்முவில் யுத்த நிறுத்தம்
# ஏனைய நாடுகளை திசை திருப்பும் முயற்சி
## பாக். குற்றச் சாட்டு

(புதுடில்லி)

ஜம்முகாஸ்மீர் விவகாரத்தில் ஏனைய நாடுகளை திசை திரும்புவதற்காகவே இந்திய அரசு போர் நிறுத்தத்தை நீடித்திருக்கிறது என்று பாகிஸ்தான் குற்றம்சாட்டியுள்ளது.

இந்திய அரசின் இப்போர் நிறுத்தத்தை தாம் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்றும் தொடர்ந்து இந்திய இராணுவம் மீது தாம் தாக்குதல் நடத்தப் போவதாகவும் பாகிஸ்தானின் தீவிரவாத அமைப்பு ஒன்று எச்சரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது

போர் நிறுத்தம் நீடிக்கும் இப்போதுள்ள நிலையில் முத்தரப்பு பேச்சுக்கள் நடத்துவது குறித்து தாம் விடுத்த கோரிக்கைக்கு இந்தியா எதுவித பதில் முயற்சிகளும் மேற்கொள்ள வில்லை எனவும் பாகிஸ்தான் சுட்டிக் காட்டியுள்ளது. (உ-07)

## விமான விபத்து விசாரணை
## அறிக்கை வெளியிடப்பட்டது

[தாய்வான்]

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் தாய்வானில் வீழ்ந்து நொருங்கிய சிங்கப்பூர் எயார் லைனஸ் விமானம் தொடர்பான விசாரணை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தைபி விமான நிலையத்தில் மூடப்பட்டிருந்து ஓடு பாதையில் ஓடி மேலெழும்ப முற்பட்ட வேளையிலே இந்த குயிக் 147 எயர் லைன்ஸ் விமானம் வீழ்ந்து நொருங்கியதும் அதிலிருந்து 83 பேர் கொல்லப்பட்டமையும் தெரிந்ததே. (உ-7)

## ஒரேநாளில்
# 500 தொலை நகல்களை காதல் தூதுவிட்ட பெண்

(ஹொங்ஹொங்)

தனது காதலை ஏற்றுக்கொள்ளும்படி ஹொங்கொங் பெண் ஒருவர் திருமணமான ஆண் ஒருவருக்கு ஆயிரம் தொலைபேசி அழைப்புகளையும் ஐநூறுக்கு மேற்பட்ட தொலை நகல் செய்திகளையும் அனுப்பியுள்ளார்.

சுங் என்ற பெயருடைய அவ் ஆணுக்கு தினமும் 50 தொலைபேசி அழைப்புகளையும் ஒரே நாளில் 500 தொலை நகல்களையும் அப்பெண் அனுப்பியுள்ளார். (உ-9)

# பணம் சேர்க்கும் வழியில் இதுவும் ஒன்றா?

(டோக்கியோ)

ஜப்பானின் டோக்கியோ கோபுரத்தில் ஏறிய ஒருவர் தன் ஆடைகளை களைந்து விட்டு குதித்து மரணத்தை தழுவப் போவதாய் அச்சுறுத்தினார்

32 வயதான இந்த நபர் கோபுரத்தின் தூண் ஒன்றின் மூலம் கோபுரத்தின் உயரத்தின் மூன்றிலொரு பகுதியை அடைந்தபின் தனது ஆடைகளைகளைந்துதரையில் எறிந்த பின்னர், தனக்குபணம் தருமாறு மக்களை கேட்டதுடன் அங்கிருந்து குதிக்கப் போவதாக அச்சுறுத்தினார்

5 மணிநேரத்தின் பின் பொலிஸார் தீயணைப்பு ஏணி மூலம் சென்று அவரைக் காப்பாற்றினர். (உ-3)

## வீரப்பனின் சகா கைது

[புதுடில்லி]

சந்தனக் கடத்தல் வீரப்பன் கும்பலில் முக்கியஸ்தரும் தமிழ் தேசிய விடுதலைப் படை அமைப்பைச் சேர்ந்தவருமாகிய அமிர் தலிங்கம் என்பவரை மாநில காவல் துறையினர் கைது செய்துள்ளனர். [உ-7]

குடி செய்வல் என்னும் ஒருவற்குத்
தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்
குறள்

வலம்புரி

## ஆய்வுகூட தவளைகளா?

இலங்கையில் இனப்பிரச்சினை தொடங்கிய காலத்திலிருந்து வெளிநாட்டுத் தூதுக் குழுக்கள், சர்வதேச மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், சர்வதேசசமூகபொருளாதார அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலதரப்பட்டவர்களும்யாழ்ப்பாணத்திற்கும், வன்னிக்குமென் மாறி மாறி வந்து போகின்றனர்.

யாழ். குடாநாட்டு மக்கள் படும்பாடு, அவர்கள் அனுபவிக்கும் துன்பதுயரங்கள், அவர்களின் அடிப்படை உரிமை மீறல்கள் என பலதரப்பட்ட பிரச்சினைகளை ஆராய்வதாகக் கூறிக் கொண்டே வெளிநாட்டுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

அவ்வாறு வருகின்றவர்கள் இருபது வருடமாக நீண்டு செல்லும் பிரச்சினையை இரண்டு மணி நேரத்திற்குள் ஆராய்ந்துவிட்டு உடன் விமானம் ஏறி கொழும்பு செல்வர். வெளிநாட்டவர்களல்லவா விமானமும் எந்நேரமும் தயார் நிலையில் இருக்கும். அதனைப் பார்த்த அவர்கள் பொது மக்களுக்கும் இப்படித்தான் இலங்கை அரசு விமான பயண சேவையை வழங்குகின்றதெனக்கருதுவர்.

போதாக்குறைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்குள் அரச அதிபர், அரசசார்பற்ற பிரதிநிதிகள் என்று பலரையும் சந்தித்து தம்கடன் முடிப்பர், நம்மவர்கள் மட்டும் சும்மாவா விடப்போகிறார்கள், அந்த அறிக்கை, இந்த அறிக்கை எனக்கையளித்து விட்டு ஏதோ வெளிநாட்டவர்களைச் சந்தித்தோம் அவர்களும் சந்தோசமாகத் தலையாட்டினார்கள் என்ற திருப்தியில் தத்தம் திறமைகளை உள்ளூரப் புகழ்ந்து கொண்டு வீடு செல்வர். முடிவு வெள்ளைக்காரர்கள் யாழ். வந்தார்கள் அவ்வளவுதான்

இதுவரைகாலமும்வந்த வெளிநாட்டவர்களால் என்னதான் செய்ய முடிந்தது. வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் யாழ். வருகை, அவர்களின் சந்திப்பு இதனால் பயனேதுமுண்டோ என்றால் அதுவுமில்லை.

அப்படியாயின் அவர்களின் யாழ்ப்பாண வருகை ஆய்வுகூடத்தில் தவளைகளைப் பரிசோதிக்கும் முறையை ஒத்தது தான். தவளையைப் பரிசோதிப்பதால் தவளைக்கு என்ன நன்மை?, ▮ பரிசோதித்தவனுக்கே நன்மை உண்டு.

### பரமபிதா காட்டிய பாதை

# ஆன்மீக தாகமுள்ள ஆசான்கள்வழிகாட்டினால் இளைஞர் சமுதாயம் இறைவாழ்வை நாடுவர்

செல்வி.பி.எம். செல்வமகள்



'அழிவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும் அணிந்து கொள்ளும் போதுமறைநூலில்எழுதியுள்ள வாக்கு நிறைவேறும், (1 கொரி 15:54) ஆக்கத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்டவை அழிவுக்கான செயலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன உயிர்காக்க உருவாக்கப்பட்டவை உயிரை எடுப்பதற்கு பயன்படுத்தப் படுகின்றன. எங்கும் எதிலும் அழிவின் நிலைகள் தொடர்கின்றன. தம்மை முதன்மைப்படுத்துவதற்காக தனிமனித அதிகாரம் சாவையும் துச்சமாக மதிக்கின்றது. பிறர் துன்பம் நோக்காத உள்ளங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. பானையில் இருந்தால் தான் அகப்பையில் வரும் என்பார்கள். பானையில் பருக்கைகள் இன்றி எவ்வாறு நாம் மற்றவர்க்கு கொடுக்கமுடியும். தான் அறியா வித்தையை எவ்வாறு மற்றவர்க்கு கற்றுக்கொடுக்க முன்வரமுடியும். இவ்வாறான நிலைதான் எம் சமுதாயத்தை எதிர் கொண்டு நிற்கின்றது.

### குருடரின் வழிகாட்டல்

எம்பெருமான் இயேசுக் கிறிஸ்துதாம் வாழ்ந்த காலத்திலே இந் நிலையை மக்களுக்கு விளக்கிக் காட்டினார் 'பார்வையற்ற ஒருவர் பார்வையற்ற வேறு ஒருவருக்கு வழிகாட்ட இயலுமா? இருவரும் குழியில் விழுவாரல்லவா? சீடர் குருவைவிட மேலானவர் அல்ல. தேர்ச்சி பெற்ற எவரும் தம் குருவை போலிருப்பர் (லூக் 6:39-40) என்று கூறினார் இன்று எல்லோரும் கற்பிக்கின்றவர்களாகமாறியுள்ளனர். கடைப்பிடிப்பவர்கள் யார் என்பது கேள்விக் குறியாகியுள்ளது. வீதிகளில் இளையதலைமுறையினர் செய்கின்ற விரும்பத்தகாத செயற்பாடுகள் சிறியோரையும் அவ்வழிக்கு ஈர்க்கின்ற செயல்களாவதற்கு நாட்கள் அதிகம் தேவை இல்லை. எனவே முன்மாதிரியான செயல்கள் எம் சமூக முன்னேற்றத்திற்கு ஊக்குவிப்பாக அமையும். அவற்றை விடுத்து தொலைக்காட்சிக் கலாச்சாரம் தொல்லை கொடுப்பதாகவே அமையும். நாம் முன்னேறிக் கொண்டு செல்கின்றோம் என்று செல்லிக் கொண்டு படுகுழியை நோக்கிச் செல்லுகின்றோம். குருடனுக்கு குருடன் வழிகாட்டி இருவரும் படுகுழியில் வீழ்ந்தது போன்ற நிலை உருவாக நாம் இடமளிக்கக் கூடாது.

### தகுதியற்ற ஆசான்கள்

இளையோரைக் கவரும் இன்றைய நூல்களும், படக் காட்சிகளும் அவர்களின் வழிகாட்டிகளாக விளங்குபவர்களினால் தகுதிகண்டு வழங்கப்படும் இடத்து ஒழுக்கம் சார்ந்த அறிவை ஊட்டியவர்களாக ஆசான்கள் போற்றப் படுவர். கடமைக்கும் ஊதியத்துக்கும் செயல் புரிகின்றவர்களால் சமுதாயம் நன்மை பெறமுடியாது 'தனி மரத்தின் கண்காணிப்பைக் காட்டுகின்றது; சொல் மனிதனின் உள்ளப் பண்பை காட்டுகின்றது என்று சீராக்கின் ஞானம் என்ற வேதாகம நூல் கூறுகின்றது.

### நற்சமுதாயம் உருவாகட்டும்

ஒரு சமுதாயம் உயர்வு காணவும், பயன்மிக்க பண்பாட்டு விழுமியங்களையும் கொண்டுவிளங்க குருக்கள், ஆசான்கள், வழிகாட்டிகளின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது. இளமையில் கல்வி சிலையில்எழுத்துஎன்பார்கள் எனவே எமது உருவாக்கங்களே வருங்கால சமுதாயத்தை உருவாக்க வழிசமைப்பதாக அமைய வேண்டும். எனவே ஆன்மீகதாகமும், ஒழுக்கமும் உள்ள நற்சமுதாயத்தை வளர்க்க நாம் முன்வருவோம்.

# இறைதத்துவ உண்மை நிலையைஎடுத்தியம்பிய உலக உத்தமர் இராமகிருஷ்ண பரமஹம்சர்

இராம கிருஷ்ண பரமஹம்சரின்ஜெயந்திதினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.

செல்வி இ. மைத்ரீ

உலகத்தில் தர்மம் சீர்குலைந்து அதர்மம் தலைவிரித்தாடுகின்ற காலத்தில் மக்கள் வாழ்வில் அமைதியை ஏற்படுத்தி அவர்களை நல்வழிப்படுத்தி தர்மத்தை நிலைநாட்டச் செய்வதற்காகக் காலத்தின் தேவை கருதிப் பல அவதார புருஷர்கள் அவதரித்த வண்ணம் இருக்கிறார்கள் இத்தகைய அவதாரங்கள் எப்போதாவது ஒரு முறைதான் புவியில் நிகழ்கிறது. அவதார புருஷர்களின் வரவால் மக்களின் ஆன்மீக வாழ்க்கை இலகுவாக்கப்படுகிறது இத்தகையவர்கள் உலகை விட்டு மறைந்தாலும் அவர்களது வாழ்க்கை முறைகளும், அனுபவங்களும் அரும் பெரும் உபதேசங்களும் இன்றளவும் நிலைத்திருந்து மக்கள் மத்தியில் ஆன்மீகக் கனவைத் தூண்டிய வண்ணம் உள்ளன என்றால் மிகையாகாது.

### ஸ்ரீ இராமகிருஷ்ணர்அவதாரம்

மிகச் சமீப காலத்தில் பாரத நாடு மேற்கத்திய நாகரிகத்தின் மோகத்தில் மூழ்கித் தன் பாரம்பரியங்களையும், மகத்தான மதக் கொள்கைகளையும் படிப்படியாக மறந்து சீர்குலையத் தொடங்கிய காலத்தே இந்து மதத்தின் சீரிய கொள்கைகளைப் பாரினில் பரப்புவதற்கும் மதங்களிற்கிடையிலான சகோதரத்துவத்தை உணர்த்தி எல்லா மதங்களும் இறைவனைச் சென்றடைவதற்கான வெவ்வேறு பாதைகள் என்பதனைத் தனது வாழ்க்கை அனுபவத்தின் மூலமாக உணர்த்துவதற்காக வந்த அரிய அவதாரம் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சருடைய அவதாரம்.

''சமயம் என்பது படிப்பதற்கு மட்டும் அமைந்த ஒன்றன்று. அனுபவத்தில் உணர்வதற்கு, உணர்ந்தபடி வாழ்க்கையில் கடைப்பிடிப்பதற்கு அமைந்ததாகும். இந்த முறையில் நிகரற்று விளங்குபவர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர். இவருடைய ஆன்மீக சாதனைகளும், ஆன்மீக அனுபவங்களும் நிகரற்றவை. ஒரு வகையில் சொல்வதாக இருந்தால் இதுவரை இந்தியாவிலோ, பிறநாடுகளிலோ இவரைப்போல் வாழ்ந்து காட்டிய சமயஞானி ஒருவருமில்லை எனலாம்'' என்று அர்னால்டு டாய்ன்பீ என்பவர் குறிப்பிட்டதை நாம் இங்கு நினைவில் கொள்வது சாலப் பொருந்தும்:

### இறைவனை அடையும் பாதைகள்

ஸ்ரீஇராமகிருஷ்ணபரமஹம்சர் எல்லா மதங்களும் இறைவனைச் சென்றடைவதற்கான வெவ்வேறு பாதைகளே என்பதனை மக்களிற்கு அனுபவபூர்வமாக உணர்த்துவதற்காகவும், பக்தி மார்க்கத்தினால் இறைவனை அடைய முடியும் என்பதை உலகிற்கு விளக்குவதற்காகவும் தாம் ஒரு அவதார புருஷர் என்பதை அறிந்திருந்தும் தமது வாழ்நாளின் அரைவாசிக் காலப்பகுதி முழுவதும் கடுமையான பல சாதனைகளை மேற்கொண்டார். வெவ்வேறு மதங்கள் கூறும் வெவ்வேறு சமய மார்க்கங்களைத் தனித்தனியே அனுஷ்டித்து ஒவ்வொரு மதமும் கூறும் இறுதி இலக்கை அடைந்தார். இவ்வாறு அவர் மேற்கொண்ட ஒவ்வொரு சாதனைகளிலும் இருந்து முடிவாக அவர் உலகிற்குக் கூறிய அரிய செய்தி எல்லாச் சமயங்களும், சமய அனுட்டானங்களும் ஒரே இலக்கைச் சென்றடையும் பல மார்க்கங்களே. மார்க்கங்கள் வேறுபடினும் இலக்கு ஒன்றே. எல்லாச் சமயங்களும் அன்பிலும் பண்பிலும் சிறந்த ஞானிகளைத் தோற்றுவித்திருக்கின்றன. எனவே எல்லாச் சமயங்களும் உண்மையான மார்க்கங்களே என்பதாகும்.

### உயர்ந்த பண்பாடே சமயம்

எனவே ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் தங்கள் மதங்கள் தான் பெரியவை மற்றைய எல்லா மதங்களும் பொய்யானவை எனும் கருத்தை விட்டொழித்து மதங்களிற்கிடையிலான சகோதரத்துவத்தைப் பேண வேண்டும். இதனால் மக்கள் மத்தியில் ஒற்றுமையும், சுபீட்சத்தையும், அமைதியையும் ஏற்படுத்தலாம் என்பதனை உணர வேண்டும் என்பதற்காக ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சர் ''சாமியின் பெயரால் சண்டையை மூட்டிப் பூமியைக் கெடாதீர்'' என்று கூறி மக்கள் மத்தியில் சமரசத்தை ஏற்படுத்த வித்திட்டார். அத்துடன் ''சமயம் என்பது தத்துவங்களோ, கொள்கைகளோ, நூல்களோ, சடங்குகளோ அல்ல வெறும் சின்னங்களும், விக்கிரகங்களும் சமயமாகாது.'' சமயம் என்பது ஓர் உயர்ந்த பண்பாடு. மனித சமூகத்தை ஒன்றுபடுத்தி அதன் மேம்பாட்டிற்காக உழைப்பதாக இருக்க வேண்டும் என்று முழங்கிய சுவாமி விவேகானந்தரின் பின்னணியில் இருப்பதும் இராமகிருஷ்ண தத்துவமே.

### சாதாரண பூசாரி

இத்தகைய அரிய செய்திகளைக் கூறியதன் மூலம் இந்துமதத்தின் உயரிய கோட்பாடுகள் யாவும மனித குலம் முழுமைக்கும் ஏற்புடையவை என்பதனை உலகிற்கு விளக்கித் தன் அனுபவ பூர்வமான வாழ்க்கை முறைகளினாலும் விஞ்ஞான உலகிற்கு உணர்த்தி மனித குலத்தை அழிவுப் பாதையில் இருந்துமீட்டுச் சாதனை படைத்தஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் இத்தனைக்கும் படித்துப் பட்டம் பெற்ற பண்டிதரல்லர். ஏழை அந்தணர் குலத்துதித்த ஓர் சாதாரண பூசாரியே. இப்படிப்பட்ட ஒரு சாதாரண மானுஷ்யனால் எப்படி ஒரு சாதனையைப் படைக்க முடிந்தது. என்று கருதுமிடத்துத்தான் அவரின் அவதார மகிமை புலப்படுகிறது.

### விவேகானந்தரின் பணி

ஸ்ரீ இராமகிருஷ்ணர் தன் அவதார நோக்கத்தைச் சுவாமி விவேகானந்தர் மூலமாக நிறைவேற்றுகிறார். மேற்கத்திய நாகரிகத்தின் மகுடமாகத் திகழ்ந்த அமெரிக்க நாட்டில் சிக்காக்கோ நகரில் நடந்த சர்வமத மகாசபையில் இந்து மதத்தின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு தனது சொற்பொழிவின் ஆரம்பத்திலேயே ''அமெரிக்க நாட்டுச் சகோதரர்களே, சகோதரிகளே'' என விழித்து அங்கு கூடியிருந்த அத்தனை பேர் மனத்திலும் சகோதர உணர்வைத் தூண்டி ஒற்றுமைக்கான மணியை ஓங்கி ஒலித்த சுவாமி விவேகானந்தர் தனது குருதேவர்ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் கட்டளைப்படி இந்து மதத்தின் சீரிய சிந்தனைகளையும், உயர்ந்த கோட்பாடுகளையும் பார் எங்கும் பரப்பினார்.

### வேற்றுமையில்ஒற்றுமை

ஒவ்வொரு ஜீவனிலும் இறைத்தன்மை ஒளிந்துள்ளது அதை வெளிக்கொணர்வது தான் சமயமாக இருக்க வேண்டும் ''சமயம் என

→ 3-ம் பக்கம் பார்க்க

சுண்ணைக்கவரும் தங்க நகைகளை உங்கள் எண்ணம் போல் செய்து தருபவர்கள்

**சாரங்கா நகைமாடம்**

177/4. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1503]

# ஆசிரியர் பற்றாக்குறையை நீக்க விரைவில் விண்ணப்பம் கோரப்படும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தற்போது நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறைவிரைவில் தீர்த்துவைப்பதற்கு ஏதுவாக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில்நடைபெற்ற வடக்கு கிழக்குமாகாண தமிழ் எம். பிக்களும் வலயக் கல்விப்பணிப்பாளர்களும் கலந்துகொண்ட கூட்டமொன்றில் பேசுகையில் கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட கல்விப் பணிப்பாளர்களும், தமிழ் எம். பிக்களும் வன்னி உட்பட வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தளபாட பற்றாக்குறை, கட்டிடவசதியீனங்கள் இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள பாடசாலைகள், தொடர்பாகவும், கல்வி அமைச்சரிடம் எடுத்துக் கூறியிருந்தனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்திருப்பதாவது.

வடக்கு கிழக்குப் பாடசாலைகளுக்கு இவ்வருடம் 15 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும், அதன் மூலம் கட்டிடங்களை அமைக்கமுடியும் என்றும் தெரிவித்தார். (வ)

மங்கையர் மனங்களைக் கொள்ளை கொள்ளும் தங்க நகைகளைப் பெற்றுக்கொள்ள

**நியூ நகுலா ஜுவல்லறி**

74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

[கி-1517]

## முதன்மைக்குரு யாழ் விஜயம்

(யாழ்ப்பாணம்)

முன்னாள் யாழ். சேகர முகாமைக்குருவும், பிலிமத்தலாவை இறையியற் கல்லூரியின் விரிவுரையாளருமாகிய ஏ. டபிள்யூ. ஜெபநேசன் தலைமையில் தென்னிலங்கையைச் சேர்ந்த இறையியற் கல்லூரி மாணவர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

யாழ். வந்துள்ள இவர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று மக்களுடன் கலந்துரையாடி வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் ஓர் உறவுப்பாலத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இக்குழுவில் இறையியற் கல்லூரியின் சிங்கள மற்றும் வெளிநாட்டு விரிவுரையாளர்களும் இடம்பெற்றுள்ளனர். (ந)

## அமைச்சர்..,

கொள்வதற்காகவே அவர் கொழும்பு வரவுள்ளார்.

கொழும்பு வரவுள்ள உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோரை சந்தித்துப் பேசுவார். (வ)

## 15ம் திகதி கப்பலுக்கு 9ம் திகதி பதிவு

(யாழ்ப்பாணம்)

அடுத்த மாதம் 15ந்திகதி பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடவுள்ள சிற்றி ஒவ் றிங்கோ கப்பலுக்கான பயண அனுமதிப் பதிவுகளை அடுத்தமாதம் 9ந்திகதி மேற்கொள்ளப்படுமென 'ரான்' அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை அடுத்த மாதம் 13ஆம் திகதி வரை சேவைவியில் ஈடுபடவுள்ள கப்பலுக்கான பயண அனுமதிக்கான பதிவுகள் ஏற்கனவே முடிவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ)

## மாந்தையில்...

இந்து, கிறிஸ்தவ அமைப்புக்களும் ஒழுங்கு செய்திருந்தன.

இப் பேரணி அந்தோனியார் புரத்தில இருந்து ஆரம்பமாகி இலுப்பைக்கடவையில் உள்ள மாந்தை உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சென்றடைந்தது.

இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் நோர்வேயின் சமாதான முயற்சியை அமுல்படுத்துமாறு கோரி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் மாந்தை உதவி அரசாங்க அதிபர் எம். பத்மதாசனிடம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், ஐ. நா. செயலாளர் கோபி அனானுக்கும் அனுப்பிவைப்பதற்கான இரண்டு மகஜர்களை கையளித்தனர். (வ)

## மன்னார் ஆயரால் அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

வன்னிப்பகுதியில் மக்கள் படும் துன்பங்களை உள்ளடக்கிய அறிக்கை ஒன்றை மன்னார்மறைமாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு ஜோசப் ஐரோப்பிய பாராளுமன்ற எம். பிக்களிடம் கையளித்துள்ளார்.

அந்த அறிக்கையில்; பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பாகவும், யுத்தக் கெடுபிடிகளினால் இடம் பெயர்ந்துள்ள அகதிகள் படும் துன்ப துயரங்கள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (வ)

## மாணவன்வவுனியாவில் நீரில்மூழ்கி மரணம்

[வவுனியா)

வவுனியா தமிழ் தேசிய பாடசாலையில் ஆண்டு 11ல் கல்விகற்கும் மாணவர்ஒருவர் குளத்தில் குளிக்கும்போது நீரில்மூழ்கி மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சபாரத்தினம் தரின் தர்ஷன் (வயது 16) என்றமாணவனே நீரில் மூழ்கி மரணமடைந்தவராவர்.

ஈரற்பெரிய குளத்திலுள்ள மலைப்பகுதியைப் பார்க்கச் சென்ற மாணவர் குழுவொன்று ஈரற்பெரிய குளத்தில் குளித்தபோது இம் மாணவன் சுழியில் சிக்கி பரிதாபகரமாக மரணமடைந்தான். (வ)

## புலிகள் மீது தாக்குதல்

(கொழும்பு)

கடந்த 23ந் திகதியன்று முகமாலைப் பகுதியில் விடுதலைப்புலிகளின்குழு ஒன்றின் மீது படையினர்நடாத்திய தாக்குதலின் போது நான்கு புலி உறுப்பினர்கள் கொல்லப் பட்டுள்ளதாகவும் புலிகள் திருப்பித்தாக்கியதில் படையினர் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. [ந-9]

## திறப்புவிழா

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்குதமிழ்விவகார அமைச்சின் கீழ் தகவல் தொழில் நுட்பப்பூங்காவை இன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்துவைப்பார்.

இப்பூங்காவிற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 11மணிமுதல் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-12)

## அமெ...

அரச அதிபர், மற்றும் யாழ் மறைமாவட்டஆயர், உட்பட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார். (ந-4)

## வன்னிக்கு உணவு

கடந்த வாரத்துக்குள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய பிரேதசங்களுக்கு 59 லொறி உணவுமற்றும் அத்தியாவசியப் பொருட்களும் 7 லொறிகளில்உரவகைளும் பிரமணாலம் குளம் சோதனைச் சாவடியூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது (ந-9)

## அரசு -.

னர்.

இச் செய்தியாளர் மாநாட்டில் ஐரோப்பிய யூனியன் பாராளுமன்றக் குழுவுக்குத் தலைமை தாங்கி வந்த ஜே. கொறின்ஸ் செய்தியாளர் மாநாட்டில் மேலும்தெரிவித்திருப்பதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் சந்தித்து நேரடியாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் நாள் வெகு தொலைவில் இல்லை. விடுதலைப் புலிகளுடனும், இலங்கை அரசுடனும் நேரடித் தொடர்பைக் கொண்டுள்ள நோர்வே அரசும், தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தான் பேச்சுவார்த்தைக்கான திகதியை தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் இலங்கையின் இனப் பிரச்சினை தொடர்பான அனுபவம் இவருக்கு உண்டு.

தற்பொழுது இடம்பெற்றுவரும் யுத்தம் புலிகளினதும், அரசினதும் பேச்சுவார்த்தைக்கு எந்தவகையிலும் குந்தகம் விளைவிக்கப்போவதில்லையெனவும், தடையாக இருக்கவும்மாட்டாது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தற்பொழுது அதிகரித்து வருகிறது. இதற்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கைக்கு நேரில் வந்து உரியவர்களைச் சந்தித்த பின்னர் -தான் இலங்கையில் இடம்பெற்று வரும் உண்மை நிலையை அறிந்து கொண்டோம்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே இடம்பெறவுள்ள சுமுகமானபேச்சுவார்த்தைக்கு நாம் பூரண ஆதரவு வழங்குவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சிக்கு எம்மாலான பூரண ஒத்துழைப்பை நாம் நல்குவோம் என்றும் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய நாடாளுமன்ற குழுவினர் இலங்கையின் அரசியல் தலைவர்களையும் மதகுருமாரையும், மற்றும் அரசியல் முக்கிய பிரமுகர்களையும் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்என்பதுகுறிப்பிடத்தக்கது. (வ)

**ஸ்ரீ செல்வா**

(யாழ்ப்பாணம்)

பிரசாந் – ஷாலினி நடித்த

**பிரியாத வரம் வேண்டும்**

10-30, 2-30 ப. நே)

(புதிய வெளியீடு)

CD பிரதி

(கி/1482

**உயர்வினைக்கண்டு உவகையடைகின்றோம்**

யா/நா/சனசமூக நிலையத்தினதும், எமது ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தினதும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதில் முன்னின்று உழைத்தவரும், பல இடங்களில் இருந்து விளையாட்டு உபகரணங்களை எமது கழகம் அன்பளிப்பாகப்பெற உதவியவரும் எத்தனையோ துன்ப துயரங்களுக்கு மத்தியிலும் ஆசிரிய மாணவர்களைப் பயிற்றுவிக்க 'வாராது வந்த மாமணி'போல் வந்த யாழ். தேசிய கல்வியற் கல்லூரி அமையவும், அப்பணியை தொடர்வதில் ஏற்படும் அசாதாரண சூழல்களைத் துணிவுடனும், மன உறுதியுடனும் வாதிட்டு வென்று வீறுநடைபோட அர்ப்பணிப்பு உணர்வுடன் உழைப்பவரும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தந்தையுமான

**திரு. திருநாவுக்கரசு கமலநாதன் அவர்கள்**

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் 'கலாநிதிப்' பட்டம் பெற்றதன்மூலம் கல்வியியலில்பெற்ற உயர் வினைக்கண்டு உவகையடைகின்றோம்.

**ஞானர்ஸ் விளையாட்டுக் கழகம்**

அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு.

(கி 1525

நேரடி CD மூலம் புதிய, பழைய பாடல்களை கசட்டில் பதிவு செய்யவும் CDயில் இருந்து CDக்கு பதிவு செய்யவும் நவீன வீடியோ மிக்சிங் கமறா மூலம் படப்பிடிப்புகள் செய்யவும் மற்றும் உள்புற, வெளிப்புற படப்பிடிப்புகள் [Photo] மற்றும் மணப்பந்தல் சேவைகளுக்கும்

**மேகாஸ் வீடியோ ஓடியோ அன் மிக்சிங் ஸ்ரூடியோ**

23, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(கி/1516)

**உடன் தேவை**

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புத்தக சாலைக்கு கணக்காளர், சிட்டை போடுகின்றவர்கள், விற்பனையாளர்கள் உடன் தேவை:

யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை. முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

ஆண் – பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கவும்;

தொடர்பு:

விளம்பர இல. 107

"வலம்புரி"

யாழ்ப்பாணம்.

(கி/1524)

இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.